## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

## தஞ்சாவூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(11.03.2023 முதல் 15.03.2023)

அறிக்கைஎண்: 20/2023 தேதி: 10.03.2023

### தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34 - 35 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 24 °செ ஆகவும் பதிவானது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (11.03.2023 முதல் 15.03.2023).

| கடந்தவாரவானிலை (07.03.2023 முதல் 09.03.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (11.03.2023 முதல் 15.03.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 07/03 | நாள்-2 08/03 | நாள்-3 09/03 | தேதி | நாள்-1 11/03 | நாள்-2 12/03 | நாள்-3 13/03 | நாள்-4 14/03 | நாள்-5 15/03 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 35 | 35 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 35 | 35 | 35 |
| 23 | 24 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 24 | 25 | 25 | 25 | 26 |
| 5 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 3 | 0 | 0 | 0 |
| 70-62 | 70-60 | 70-61 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-50 | 90-50 | 90-50 | 90-50 | 90-50 |
| 4 | 6 | 6 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 | 6 | 8 | 6 | 8 |
| கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | வட வட கிழக்கு | காற்றின் திசை | மேற்கு வட மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு |

### தஞ்சாவூர் மாவட்டத்திற்கானவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டமின்றி தெளிவாக காணப்படும். 11.03.2023 முதல் 15.03.2023 வரை மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 34 – 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 – 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 – 8 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு வட மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் தரிசு | உளுந்து | நெல் தரிசு பயறுவகைப் பயிர்களுக்கு பூக்கும் தருணத்திலும், அடுத்து 15 நாட்கள் இடைவெளியிலும் டிஏபி (2 சதம்) + முரியேட் ஆப் பொட்டாஷ் (1 சதம்) கரைசலை காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். டிஏபி கரைசலுக்கு பதிலாக "பயறு அதிசயம்" எக்டருக்கு 5.0 கிலோ என்ற அளவில் மொட்டு வைக்கும் தருணத்தில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும் |
| கரும்பு | வளர்ச்சி பருவம் | 5 மாத கரும்பில், காய்ந்த இலைகளை உரித்து மண்ணின் மேற்பரப்பில் போர்வை போல் பரப்பி மண் ஈரபதத்தை பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | உடல் வெப்பநிலையை பராமரிக்க புண்ணாக்குடன் 100 கிராம் வெல்லம் சேர்த்து குடிநீரில் தரவேண்டும். தாதுஉப்பு கலவை ஒரு பசு மாட்டிற்க்கு 30 கிராம் வீதம் குடிநீரில் தர வேண்டும். |

## குறுஞ்செய்தி

உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI).

**இயக்குநர்**